**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 191/2019**

பெயர் : சரவணன் P.W.1.

த/பெ. : தெட்சிணாமூர்த்தி

தேதி : 21.08.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**10 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:** –

1. நான் கிரயம் பெற்றுள்ள தாவா சொத்தின் நான்கெல்லையும், 1ம் பிரதிவாதி கிரயம் பெற்றுள்ள சொத்தின் நான்கெல்லையும் ஒன்று என்றால் சரிதான். தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ளது. அதில் உளுந்து, பயிர் மற்றும் நிலக்கடலை சாகுபடி செய்து வருகிறேன். 1ம் பிரதிவாதி மற்றும் 8,9 பிரதிவாதிகள் தனித்தனியே வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்து தாவா சொத்தை அளவீடு செய்வதற்காக தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. வாசாஆ 5 ஆன ஆவணம் குறித்து வட்டாட்சியர் ஏதேனும் நடவடிக்கை எடுத்தாரா என்றால் நிலுவையில் உள்ளது. நான் கிரயம் பெற்ற புல எண் மாறியது தொடர்பாக திருத்த ஆவணம் செய்து தர கோரி சார் பதிவாளர் அலுவலகத்தில் மனு செய்தேனா என்றால் இல்லை. நான் சார் பதிவாளரிடம் மேற்படி மனு கொடுக்காமல் நீதிமன்றத்தில் நேரடியாக புல எண் 320/11 என்பது தான் சரியானது என கோரி விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். புல எண். 320/11 ஆனது 3 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிராம கணக்கில் புல எண்.320/11A, 320/11B1, 320/11B2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. 6,7 பிரதிவாதிகள் எனக்கு எதிராக அசல் வழக்கு எண். 221/2014 என சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.